கோரிக்கையின் மீது விவாதம் நடைபெற இருக்கின்ற இந்த நேரத்தில் நான் ஒரு தகவலை அவை முன்னவரிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன். 3—11—1986 ஆம் நாளன்று மொழி பற்றிய அரசினர் தீர்மானம் அவையில் ஏகமனதாக நிறை வேற்றப்பட்டதையும், அது மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப் பட்டதையும் அல்லது வைப்பதாகச் சொல்லப்படுவதையும் இந்த அவை நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறது.

9—12—1986 அன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் கடிதம் எழுதினேன். அதற்கு பிரதமர் பதில் அளித்தார். அது வேறு விஷயம். 7—1—1987-ல் நான் பெற்ற பதில். முக்கியமான உரிமைப்பிரச்சினை என்ற காரணத்தினால் நான் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஏறத்தாழ 6 மாதம் தாண்டி விட்டது. அங்கிருந்து ஏதாவது பதில் வந்ததா ? உயிர்த் துடிப்பு மிக்க உரிமைப் பிரச்சினையாக இருக்கின்ற அந்தத் தீர்மானத்திற்கு வடிவம் தருவதற்கு மைய அரசு தயாராக இருக்கிறது என்ற தகவல் நமது அமைச்சரவைக் குக் கிடைத்திருக்கிறதா ? கிடைத்தால் இந்த அவையில் அவர் வைப்பாரா ? கிடைக்காவிட்டால் அதைப் பெறுவதற்கு நட வடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்த அரசு என்ன செய்யப் போகிறது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நாஞ்சிலார் அவர்கள் எழுப்பி இருக்கிற பிரச்சினை பற்றி இருக்கிற நிலைமை களை அறிந்து இரண்டொரு நாட்களில் விளக்குகிறேன்.

(உ) நெல்லை மாவட்டத்திலே அமையவிருக்கும் இந்தியக் கடற் படை நுண் தொடர்பு நிலையத்திற்குப் பணியாளர்கள் தேர்ந்தெடுத்தல்.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன் என்ற முறையிலே —இன்றையதினம் மத்திய அரசு தமிழகத்திலே இந்தியக் கடற் படைக்குச் சொந்தமான நுண் தொடர்பு தகவல் நிலையம், வ்கைலாப் போன்று, நெல்லை மாவட்டத்திலே அமைத்திருக் கின்றது. அப்படி அமைக்கப்பட்ட அந்த நிலையத்திற்கு, இன்றைக்கு பல கோடி ரூபாய்க்கான அந்தத் திட்டத்திற்காக அதிகாரிகளையும், ஊழியர்களையும் தேர்ந்தெடுக்கின்ற அந்தப்

1987 ஏப்ரல் 8] [திரு. அ. மலர்மன்னன்]

பொறுப்பினை இன்றையதினம் நெல்லை மாவட்டத்திலே இல்லாமல், திருவனந்தபுரத்திலே இருந்து ஆட்களை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதிலும், குறிப்பாக இன்றையதினம் அதற்கு அருகிலே இருக்கின்ற கன்னியாகுமரி மாவட்டத்தை விட்டுவிட்டு—ஒரு திட்டத்தைத் தொடங்குவதற்கு முன்னால், அப்படித் தொடங்கப்பட்ட திட்டத்திற்கு இந்த மாநிலத்திலே இருக்கின்ற ஆட்களைப் பெருவாரியாக எடுக்கவேண்டும் என்ற நியதியும், வழிமுறையும் இதுவரையிலேயும் கடைப்பிடிக்கப்பட்டு வந்து இருக்கிறது. ஆனால் இன்றையதினம் அந்தத் திட்டத்திலே (குறுக்கீடுகள்) . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்ஃபார்மேஷனிலே ரொம்ப வேண்டாம். பதில் கொடுப்பதற்கு இங்கே யாரும் இல்லை. (குறுக்கீடுகள்) மற்ற உறுப்பினர்கள் என்னிடம் முன் அனுமதி கேட்கவில்லை. என்னிடம் நீங்கள் என்ன கேட்கப் போகிறீர்கள் என்று சொல்லவில்லை. எதைச் சொல்லி கேட்கப் போகிறீர்கள், என்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நாளைக் காலை உங்களை அனுமதிக்கிறேன்.

3. விதி 110 (1)-இன் கீழ் அமைச்சர்களின் அறிக்கைகள்.

(அ) தமிழக வறட்சிநிலை குறித்து.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 110 (1)-ன் கீழ் பேரவைக்கு ஒரு அறிக்கையை அளிக்க நான் விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் நிலவும் வறட்சி நிலை குறித்து, ரூபாய் 347 கோடியே 25 இலட்சத்திற்கு நிதியுதவி கோரி ஒரு விவர அறிக்கை 13—3—1987 அன்று மைய அரசுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதையொட்டி, மத்திய நிபுணர் குழு இம்மாநிலத்திற்கு வருகை தருவதற்கு முன்னதாக உடனடியாக ரூபாய் 30 கோடி முன்பணமாக அளிக்கும்படி மத்திய அரசிடம் கேட்கப்பட்டுள்ளது. 31—3—1987 வரை வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ், 1,631 ஆழ்துளைக் கிணறுகளும், 25 திறந்த வெளிக் கிணறுகளும் முடிக்கப்பட்டுள்ளன.

பல்வேறு குடிநீர்த் திட்டப் பணிகளுக்காக 4 கோடியே 34 இலட்சத்து 47 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. குடிநீர் வடிகால் வாரியம் தனது வளமையான திட்டத்தின் கீழ் ரூபாய் 3 கோடியே 81 இலட்சம் செலவில் 1524 ஆழ்துளைக் கிணறுகள்